O.S.No.91/2023 தேதி – 01.02.2025

வா.சா.1. – கவிதா

1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி–

என் கணவர் இறந்த பின்னர் காவல்நிலையத்தில் புகார் எதுவும் கொடுத்தேனா என்றால் மின்சார வாரியத்திலிருந்து புகார் கொடுத்துவிட்டதாக காவல்நிலையத்தில் சொன்னார்கள், நான் சென்றுவிட்டேன். மின்சார வாரியத்திலிருந்து கொடுக்கப்பட்ட புகாரின் பேரில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையை நான் வாங்கினேனா என்றால் வாங்கினேன், என் பிள்ளைகள் படித்துக் காட்டினார்கள், முதல் தகவல் அறிக்கை பற்றிய முழு விவரங்கள் எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் தென்னை மரம், போஸ்ட் கம்பம், கிணறு ஆகியவைகள் இருப்பது தெரிகிறது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் இரண்டு போஸ்ட் கம்பமும், ஒரு இழுவை கம்பியும் தெரிகறதா என்றால் தெரிகிறது. மேற்படி இரண்டு போஸ்ட் கம்பத்தில் ஒரு போஸ்ட் கம்பத்தில் 2 இரும்பு பெட்டிகள் இருக்கிறது தெரிகிறதா என்றால் தெரிகிறது. அதில் ஒரு இரும்பு பெட்டியில் பீஸ் கேரியர் இருக்கிறது தெரிகிறதா என்றால் தெரிகிறது. வயக்காட்டில் என் கணவர் கிடந்தார், கிணற்றிலிருந்து எவ்வளவு அடி துாரத்தில் கிடந்தார் என்பது எனக்கு தெரியாது. என் கணவர் மேற்படி வயலை குத்தகைக்கு எடுத்து ஒரு வருடம் குத்தகை பார்த்தார். அதேபோல் மேற்படி வயலில் வேறு நபர்களும் குத்தகைக்கு எடுத்து விவசாயம் செய்வார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. மிளகாய்பட்டி என்ற கிராமம் எங்கள் கிராமத்திலிருந்து எவ்வளவு துாரத்தில் இருக்கும் என்றால் 1 கி.மீ துாரத்தில் இருக்கும். மிளகாய்பட்டி கிராமத்தை சேர்ந்த ராமர், கதிர்வேல், குருவேல், பொன்னுச்சாமி ஆகியோர்கள் என் கணவரின் நண்பர்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. என் கணவர் எவ்வாறு மேற்படி தோட்டத்தில் குத்தகைக்கு எடுத்து விவசாயம் செய்வாரோ அதுபோன்று மேற்படி மிளகாய்பட்டி கிராமத்தை சேர்ந்த நபர்களும் குத்தகைக்கு எடுத்து விவசாயம் செய்வார்கள், அதன் மூலம் என் கணவருக்கு மேற்படி நபர்கள் நண்பர்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி மிளகாய்பட்டி கிராமத்தை சேர்ந்த நபர்களுக்கு நான் மேற்படி தோட்டத்திற்கு

துணி துவைக்க சென்ற விவரம் தெரியும் என்றால் சரியல்ல. என்னுடன் சேர்ந்து என் மூன்று பிள்ளைகளும் மேற்படி தோட்டத்திற்கு துணி துவைக்க, குளிக்க வருவார்கள் என்றால் சரியல்ல. என் கணவர் இறந்த பின்னர், என் கணவர் உயிர் பிரிந்த இடத்தை போய் ஒருமுறையாவது பார்த்தது உண்டா என்றால் இல்லை. என் கணவர் மீது பாசம் இல்லாததால் தான் நான் அந்த இடத்தை போய் பார்க்கவில்லை என்றும், எனக்கு பணம் வேண்டும் என்ற ஒரே எண்ணத்தில் தான் இந்த வழக்கை போட்டுள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. மேற்படி தோட்டத்திற்கு எந்த திசையில் எங்கள் ஊர் உள்ளது என்றால் எனக்கு தெரியவில்லை. தினசரி என் கணவர் எங்கள் ஊரிலிருந்து நடந்து வந்து மேற்படி தோட்டத்தை கடந்து கண்மாய்க்கு சென்றுவிட்டு குளித்துவிட்டு வருவார் என்றால் சரிதான். அவ்வாறு தான் சம்பவத்தன்றும் குளிக்கச் செல்கிறேன் என்று சொல்லிவிட்டு சென்றார் என்றால் சரிதான். என் கணவர் இறந்த விவரத்தை எனக்கு யார் சொன்னார் என்றால் சிறுவர்கள் சொன்னார்கள், பெயர் தெரியாது, இரவு நல்ல மழை, மழை ஈரத்தில் தான் விழுந்துவிட்டாரோ என்று நினைத்து நாங்கள் சென்று பார்க்கப் போனோம். மேற்படி தோட்டத்து உரிமையாளரிடமிருந்து பணம் பறிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என் கணவர் இறந்தது சம்மந்தமாக காவல்நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்காததால் எனக்கு எந்த இழப்பீடும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை – இல்லை.</u>